# குழித்துறை நகராட்சி
## நிர்வாக அறிக்கை
## 2011–2012
## பொருளடக்கம்


1. நகர் மன்றம்
2. நிர்வாகம்
   1. அமைப்பு பணி
   2. வரவினஙகள் விபரம்
3. கல்வி வசதிகள்
4. சாலைகள் கட்டிடஙகள்
5. தெரு விளக்கு வசதிகள்
6. குடிநீர் விநியோகம்
7. நகரமைப்பு பிரிவு
8. பொது சுகாதாரம்
9. முடிக்கப்பட்ட பணிகள்
10. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்
11. சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா பணிகள்
12. வழக்குகள்
13. தணிக்கை
14. நிதி நிலைமை
15. முடிவுரை

## 1. நகர் மன்றம் : –

### (1–4–2011 முதல் 24–10–2011 முடிய)

| | | | |
|---|---|---|---|
| 1. திரு.பொன். ஆசைத்தம்பி | : நகர் மன்றத் தலைவர் | | |
| 2. திரு.எஸ். யூஜின் | : நகர் மன்றத் துணை தலைவர் | | |
| 3. செல்வி.டி. ஞானசெல்வி | : உறுப்பினர் வார்டு 1 | | |
| 4. திருமதி.ஆர். மார்கிரேட் கெலன்மணி | : | | 2 வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 5. திரு.ற்றி. ஷெர்லி நெல்சன் | : | “ | 3 |
| 6. திரு.வி. விஜீ | : | “ | 4 |
| 7. திருமதி. எம். ஜெயலெட்சுமி | : | “ | 5 வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 8. திருமதி.ஜி.எஸ். மினிகுமாரி | : | “ | 6 வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 9. திருமதி.வி. ரேணுகா | : | “ | 7 |
| 10. திரு.எம். பிரவின்ராஜா | : | “ | 8 ஒப்பந்தகுழு உறுப்பினர் |
| 11. திரு.எம். மோசஸ் சுதீர் | : | “ | 9 |
| 12. திரு.என். சுந்தர்ராஜ் | : | “ | 10 |
| 13. திரு.ஏ. ராஜசேகர் | : | “ | 11 நியமனக்குழு உறுப்பினர் |
| 14. திருமதி.எஸ். மேரி ஜெயந்தி | : | “ | 12 வரிமேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 15. திருமதி.எஸ்.பி. ஜெலிலா ராணி | : | “ | 13 |
| 16. திரு.ற்றி. சேகர் | : | “ | 14 |
| 17. திரு.என். ஜோசப் | : | “ | 15 |
| 18. திருமதி.சி. செல்வகுமாரி | : | “ | 16 |
| 19. திருமதி.எ.எம்.வி டெல்பின் | : | “ | 17 |

20. திரு.கே. இரத்தினமணி : “ 18

21. திரு.பொன். சகாதேவன் : “ 21

**நகர் மன்றம் : –**

(25–10–2011 முதல் )

| | | | |
|---|---|---|---|
| 1. திருமதி.எ.எம்.வி. டெல்பின் | : நகர் மன்றத் தலைவர் | | |
| 2. திரு.மே. மோசஸ் சுதீர் | : நகர் மன்றத் துணை தலைவர் | | |
| 3. திருமதி.எ. நித்தியா | : உறுப்பினர் வார்டு 1 | | |
| 4. திருமதி.சி. லலிதா | : | “ | 2 வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 5. திரு.தோ. ஷெர்லி நெல்சன் | : | “ | 3 |
| 6. திரு.கே. சுனில்குமார் | : | “ | 4 ஒப்பந்தக்குழு உறுப்பினர் |
| 7. திருமதி.எம். ஜெயலெட்சுமி | : | “ | 5 |
| 8. திரு.பொ. செல்வராஜன் | : | “ | 6 |
| 9. திருமதி.எஸ்.எ. சந்தியா | : | “ | 7 |
| 10. திரு.பி.எஸ். இராஜகுமார் | : | “ | 8 |
| 11. திரு.நா. சுந்தர்ராஜ் | : | “ | 10 வரி மேல் முறையீட்டுக் குழு உறுப்பினர் |
| 12. திரு.ஏ. ராஜசேகர் | : | “ | 11 |
| 13. திருமதி.பா. பிரேமா ஸ்டெல்லா | : | “ | 12 |
| 14. திருமதி.எஸ்.பி. ஜெலிலா ராணி | : | “ | 13 நியமனக்குழு உறுப்பினர் |
| 15. திரு.ற்றி. சேகர் | : | “ | 14 |
| 16. திரு.அ. ஜோசப் சுகி | : | “ | 15 |

| | | | |
|---|---|---|---|
| 17. திரு.அ. அருள் ராஜ் | : | " | 16 |
| 18. திருமதி.எல். ஷீபா ராணி | : | " | 17 வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 19. திரு.கு. இரத்தினமணி | : | " | 18 |
| 20. திரு.மை. சர்தார்ஷா | : | " | 19 வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர் |
| 21. திரு.பொன். ஆசைத்தம்பி | : | " | 20 |
| 22. திரு.பொன். சகாதேவன் | : | " | 21 |

**நகர் மன்றத் தலைவர்:–**

1) திரு.பொன். ஆசைத்தம்பி 1–4–2011 முதல் 24–10–2011 முடிய தலைவராக இருந்தார்.

2) திருமதி.எ.எம்.வி. டெல்பின் 25–10–2011 முதல் தொடர்ந்து தலைவராக இருந்து வருகிறார்.

## நிர்வாக அதிகாரிகள்

**ஆணையர்:–**

1. திரு.பி.கே. ரமேஷ், பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு — 1–4–2011 முதல் 23–08–2011

2. திரு.க. பழனிவேல், ஆணையாளர் — 24–08–2011 முதல் 31–03–2012

**பொறியாளர்:–**

1. திரு.பி.கே. ரமேஷ், பொறியாளர், குழித்துறை நகராட்சி — 01–04–2011 முதல் 10–11–2011

2. திரு.கு. மணி பொறியாளர் — 25–01–2012 முதல் 31–03–2012

## மேலாளர்:–

1. திருமதி.எம்.ஆர். வசந்தி, மேலாளர் — 01–04–2011 முதல் 01–07–2011

2. திருமதி.ற்றி. பிரேமா, கணக்கர் மற்றும் மேலாளர் பொறுப்பு — 01–07–2011 முதல் 30–11–2011

3. திரு.எஸ். ஜேம்ஸ் வில்சன், கணக்கர் மற்றும் மேலாளர் பொறுப்பு — 01–12–2011 முதல் 31–03–2012

## அமைப்பும் ஆட்சியும்

## நகராட்சி எல்கை

குழித்துறை நகராட்சி 1913–ம் வருடம் தோற்றுவிக்கப்பட்ட தேதி முதல் இந்நகராட்சி மூன்றாம் நிலையாக திகழ்ந்தது.. 22–5–1998 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்குத் துறை (நிதி–5) அரசாணை எண்.85–ன்படி 22–5–98 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகர எல்கைக்குள் விளவங்கோடு, நல்லூார் மற்றும் பாகோடு கிராமங்கள் அடஙகியுள்ளது.

நகராட்சியில் பரப்பளவு 5.15 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011–ம் ஆண்டு கணக்கின்படி நகரின் மக்கள் தொகை 21314. அதில் 10551 ஆண்களும், 10763 பெண்களும் ஆகும். அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்கையிலும் தொகுதியிலும் யாதொரு மாற்றமுமில்லை. அறிக்கை ஆண்டில் இந்நகரம் 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. வார்டு எண்.1,2,5,12,13 மற்றும் 17 பெண்களுக்காக (பொது)வும், வார்டு எண்.7 தாழ்த்தப்பட்ட பெண்ணுக்காகவும் அரசாணை எண்.89 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகுத் துறை நாள் 20–8–96–ன்படி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

25–10–2011 அறிக்கை ஆண்டில் பொது மக்களால் தேர்வு செய்யப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.

## கூட்டஙகள்

பொது மக்களால் தேர்வு செய்யப்பட்ட மன்றம் 25–10–1996 முதல் செயல்பட்டு வருகிறது. 1–4–2011 முதல் 31–3–2012 முடிய மன்ற கூட்டத்தில் வைத்த பொருள்கள் அனைத்தும் முடிவு செய்யப்பட்டன.

சாதாரண கூட்டஙகள் மாதத்தில் ஒன்றுக்கு குறையாமலும் மற்றும் வேண்டும் போது அவசர கூட்டஙகளும் ஒழுஙகாக நடைபெற்றன. அறிக்கை ஆண்டில் நடைபெற்ற கூட்டஙகள் 24 இவற்றில் சாதாரண கூட்டஙகள் 9 அவசரக் கூட்டஙகள் 15 ஆகும். இதில் 320 பொருட்கள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்பட்டன. மேற்படி பொருட்கள் அனைத்தும் அந்தந்த

கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டன. தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3—வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி மன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டன. நகர் மன்ற உறுப்பினர்களுக்கு அமர்வுபடியாக நிதியாண்டில் 1,39,200/— செலவிடப்பட்டன.

## குழுக்கள்

25—10—2006 முதல் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்களும், 25—10—2011 முதல் திருமதி.எ.எம்.வி. டெல்பின் அவர்களும் தலைவராக பணியாற்றி உள்ளனார். அறிக்கை ஆண்டில் நியமனக்குழு கூட்டம் ஒன்று நடைபெற்றது.

## 2) நிர்வாகம்

இந்நகராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் இதர பிரிவு பணியாளர்களின் சம்பளத்திற்காக ரூ.149.27 லட்சம் ஓய்வூதிய வகையில் ரூ.1500000/— மற்றும் இதர வகையில் 300000/—ம் செலவாகி உள்ளது. ஆணையாளர் ஊதியம் அரசாஙகத்திலிருந்து பெறப்பட்டு வருகிறது. பயணப்படி, மருத்துவபடி மற்றும் வீட்டு வாடகைப்படி நகராட்சி நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மேலாளர் | – 1 |
| கணக்கர் (உதவியாளர் நிலையில்) | – 1 |
| இளநிலை உதவியாளர் | – 5 |
| பதிவுறை எழுத்தர் | – 1 |
| தட்டச்சர் | – 1 |
| புள்ளி விபர குறிப்பாளர் | – 1 |

### முறையீடுகள்:—

நகராட்சி பணியாளர்களால் அறிக்கை ஆண்டில் ஒழுஙகு நடவடிக்கையின் மேல், உயர் அதிகாரிகளுக்கு மேல் முறையீடுக்ள் ஏதும்செய்யப்படவில்லை.

### வரியினஙகள் விபரம்:—

நடப்பாண்டில் இந்நகராட்சியில் சொத்துவரி இனத்தில் வரிவிகிதம் ரூ.15.50 சதவீதம் என நிர்ணயம் செய்யப்பட்டு மண்டலம் எ.பி.சி. என பிரிக்கப்பட்டு சதுர அடி அடிப்படையால் கொண்டு புதிய வரிவிதிப்புகள் ஏற்படுத்தப்படுகின்றது. அவ்வகையில் நடப்பாண்டில் 385 எண்ணம் புதிய வரிவிதிப்புகள் ஏற்படுத்தப்பட்டும் அதன்படி நடப்பாண்டில் 10214 வரிவிதிப்புகள் உள்ளன. புதிதாக வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்ட வகையில் ரூ.3.10 லட்சம் ஆண்டுக்கு வருமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளின் எண்ணிக்கை எதுமில்லை.

வருட வாடகை மதிப்பு ரூ.180/– வரையிலும் உள்ள கட்டிடஙகளுக்கு பவரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது மற்றும் காலிமனை வரி அரையாண்டிற்கு ரூ.1000/– விலை மதிப்பிற்கு ரூ.1/– வீதம் வரி விதிக்கப்பட்டு உள்ளது.

வருவாய் ஆய்வாளர் – 1

வருவாய் உதவியாளர் – 5

## வரி இனஙகளும் கேட்பும் வசூலும்

**சொத்துவரி:–** அறிக்கையாண்டில் சொத்துவரியினத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.1,40,95,098/–மும் ரூ.88,99,989/– வசூல் செய்யப்பட்டும் ரூ.51,95,109/– நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் சதவீதம் 63.14 ஆகும் சென்ற ஆண்டில் அதன் சதவீதம் 57 ஆகும்.

**தொழில்வரி:–** அறிக்கையாண்டில் தொழில்வரி இனத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.37,53,312/–ம் ரூ.20,16,650/– வசூல் செய்யப்பட்டும் ரூ.17,36,662/– நிலுவையாகவும் இருந்துள்ளது. நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் சதவீதம் 53.73 ஆகும்.

**குடிநீர் கட்டணம்:–** அறிக்கையாண்டில் குடிநீர் கட்டண இனத்தில் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.35,93,183/–ம் ரூ.17,72,746/– வசூல் செய்யப்பட்டும் ரூ.18,20,437/– நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி தொகையினை வசூல் செய்ய குடிநீர் இணைப்பு துண்டிப்பு போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இதன் சதவிகிதம் ரூ.49.34 ஆகும்.

**வரியில்லா இனஙகள்:–** அறிக்கையாண்டில் வரியில்லா இனஙகளின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக ரூ.1,74,65,270/–மும் ரூ.1,15,36,438/– வசூல் செய்யப்பட்டும் ரூ.59,28,832/– நிலுவையாகவும் இருந்துள்ளது. மேற்படி நிலுவைத்தொகையினை வசூல் செய்ய வழக்குகள் தொடரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. அதன் 66.05 சதவிகிதம் ஆகும்.

## நகராட்சியின் அசையா சொத்துக்களின் மீதான மேலாதாய வரவினம்

### 1. சந்தைகள்:–

அ) நகராட்சியால் மூன்று தினசரி சந்தை மற்றும் ஒரு கன்றுகாலி வார சந்தை பாரமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இவைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2009–2010, 2010–2011, 2011–2012 மூன்றாண்டுகளுக்கு ஏலம் விடப்பட்டு 2010–2011–ம் ஆண்டிற்கு ரூ.67,05,100/–ற்கு வருமானம் வரப்பட்டுள்ளது.

சந்தைகளிலிருந்து வரும் வருமானம் சந்தை முன்னேற்ற பணிகளுக்கு மற்றும் பொது நலனுக்கு பயன்படுத்தி வருகிறது.

## 2. பார உந்து நிலையம்:—

நகராட்சியால் பார உந்து நிலையம் ஒன்றும், மினி பார உந்து நிலையம் ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு பார உந்து ஒன்றுக்கு ரூ.15/— வீதமும் மினி பார உந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10/—ம் கட்டணம் வசூலித்து வருகிறது. அறிக்கை ஆண்டில் வருமானம் ரூ.60,600/—ம் வருமானம் ஆகும். மினி பார உந்து நிலையம் குத்தகைக்கு விடப்பட்டும் உள்ளது. தனியாரால் வண்டி பேட்டையோ, பார உந்து நிலையமோ பராமரிக்கப்படவில்லை.

## 3 ஆடு, மாடு, கோழி வதை செய்யுமிடம்:—

நகராட்சியால் ஒரு ஆடு மாடு கோழி வதை செய்யும் இடம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை ஏலத்தில் விடப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் வருமானம் ரூ.89,985/—ம் ஆகும். நகராட்சி எல்கைக்குள் தனியாரால் ஆடு மாடு வதை செய்யும் இடம் ஒன்றும் பாராமரிக்கப்படவில்லை.

## 4. கட்டண கழிப்பறைகள்:—

மார்த்தாண்டம் காய்கறிச் சந்தையில் உள்ளே 8 அறைகள் கொண்ட சிறுநீர் கழிப்பறையும் 8 அறைகள் கொண்ட மலகழிப்பறையும் அடங்கிய நவீன கட்டண கழிப்பிடம் கட்ட அரசு நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1992—ம் ஆண்டில் ரூ.20000/— அனுமதிக்கப்பட்டு கட்டிடம் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் நகராட்சி பேரூந்து நிலையத்தில் ஒன்றும் பழைய தியேட்டர் சந்திப்பில் ஒன்றும், கல்பாலத்தடி அருகில் ஒன்றும், லாறி பேட்டையில் புதியதாக கட்டண கழிப்பறை செய்யப்பட்டது. ஆக மொத்தம் நான்கு நவீன கட்டண கழிப்பறைகள் அறிக்கையாண்டில் ஏலம் விடப்பட்டு வருவாய் ஈட்டப்பட்டது. அதன் மூலம் வரவு ரூ.1,33,455/— ஆகும்.

## 5. மரங்கள் மேலாதாயம்:—

நகராட்சி எல்கைக்குள் உள்ள நகராட்சிக்கு சொந்தமான அனைத்து வகை மரங்களின் மேலாதாய பலனை அனுபவித்துக் கொள்ள பகிரஙகமாக ஏலம் விடப்பட்டது. மேற்படி ஏலத்தின் மூலமாக அறிக்கையாண்டில் வரவு ரூ.12,022/— ஆகும்.

## 6. வாவுபலி பொருட்காட்சி:-

ஆண்டுதோறும் ஆடி அமாவாசையை முன்னிட்டு வாவுபலி பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு ஆடி அமாவாசையை முன்னிட்டு 20—07—2011 முதல் 08—08—2011 முடிய 20 தினஙகள் 86—வது வாவுபலி பொருட்காட்சி நடத்தப்பட்டது. இதில் நகராட்சிக்கு வரவாக ரூ.54,43,755/— வரப்பட்டது. அதில் ரூ.16,37,396/— செலவு

செய்யப்பட்டுள்ளது. நிகர லாபமாக ரூ.38,06,359/— கிடைத்துள்ளது. பொருட்காட்சி தங்கள் முதாதையர்களை நினைவு கூறும் வகையில் தாம்பிரபரணி ஆற்றின் கரையில் தற்பணம் செலுத்துவதை முன்னிட்டு நடத்தப்பட்டு வருகிறது. அப்போது தற்பணம் செய்யும் மக்கள் பொருட்காட்சி திடலில் கூடுவதால் அங்கு விற்பனை பொருட்களும், மரக்கன்றுகளும், செடி, கொடிகளும் விற்பனை செய்வது கைவினைஞர் பொருட்களையும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் விவசாய பொருட்களும், கைவினை பொருட்களும் காட்சிக்காக வைக்கப்பட்டு சிறந்தவைகளுக்கு பரிசுகளும், கபடி போட்டிகள் நடத்தப்பட்டு வின்னர், ரன்னர்களுக்கு கேடாயஙகளும் வழஙகப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இதற்காக சுழற்கோப்பை பரிசுகள் வழஙகப்பட்டது.

## 7. உணவு கலப்பட உரிமையாணை:—

நகராட்சி எல்கைக்குள் நடத்தப்படும் எல்லா உணவு விடுதிகள்,மிட்டாய் கடைகள், பேக்கரிகள் முதலியன 1920—ம் வருடத்திய தமிழ் நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் மற்றும் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின்படியும் உரிம கட்டணஙகள் வசூலிக்கப்பட்டுள்ளன. அதன்படி அறிக்கையாண்டில் ரூ.8905/— வசூல் செய்யப்பட்டுள்ளது.

## 8. திரையரஙகம்:—

நகராட்சி எல்கைக்குள் ஒரு திரையரஙகம் உள்ளது. அறிக்கை ஆண்டில் கேளிக்கைவரியாக மேற்படி தியேட்டரிலிருந்து ரூ.16,810/— கிடைக்கப்பெற்றது.

## 9. வி.எல்.சி.கலையரஙகம்:—

நகராட்சி பொருட்காட்சி நடத்தும் இடத்தில் விஜயலட்சுமி முந்திரிபருப்பு கம்பெனியாரால் ரூ.6.00 இலட்சம் செலவில் திருமண மண்டபவம் கட்டப்பட்டு நகராட்சிக்கு இனாமாக வழஙகப்பட்டது. இதனை நகராட்சியால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் திருமண நிகழ்ச்சி நடத்துவதற்கு ஏலம் விடப்பட்டது. ஆண்டிற்கு ரூ.3,25,000/— வருமானம் கிடைக்கிறது. வரும் வருமானத்தினை கலையரஙகம் அபிவிருத்தி பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் உத்தரவின்படி 1—4—1973 முதல் சைக்கிள் வரி ரத்து செய்யப்பட்டது. மேலும் 1920—ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்ட 92—வது விதிகளின்படி வாகனஙகள் மற்றும் மிருகஙகள் இனத்தில் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் மிருகம் மற்றும் வாகனத்திற்கு விதிக்கப்பட்ட வரியினஙகளில் வரவும் மற்றும் சுஙக வரி ஈடு செய்வது மூலமாகவும் (டோல் காமன்சேஷன்) மூலமாகவும் வரவு ஏதும் இல்லை.

1. மிருகஙகள் மற்றும் வாகனாதி வரி — இல்லை
2. டோல் காம்பன்சேஷன் — இல்லை
3. தஙகும் விடுதிகள் சத்திரஙகள் தண்ணீர் பந்தல்கள் — இல்லை
4. அட்ஹாக் மான்யம் — இல்லை

நகர் மன்றத்தால் தஙகும் விடுதிகளோ சத்திரஙகளோ தண்ணிர் பந்தல்களோ பராமரிக்கவில்லை.

## 3) ஆரம்ப கல்வி

நகராட்சியால் ஆரம்ப பள்ளிகள் ஒன்றும் பராமரிக்கப்பபடவில்லை. நகராட்சி எல்கைக்குள் அரசு மற்றும் தனியார் நிறுவனத்தால் 11 ஆரம்ப கல்வி பள்ளிகள் பராமரித்து வருகிறார்கள். கட்டாயக் கல்வி திட்டம் 1947–ம் ஆண்டு முதல் அமுலுக்கு வரப்பட்டது. நகராட்சியால் ஆரம்ப கல்வி பள்ளிகள் பராமரிக்காததால் கல்வி வரி நகராட்சியால் விதிக்கப்படவில்லை.

## நடுநிலை பள்ளிகள்

இந்நகராட்சியில் நடுநிலைப்பள்ளியோ அல்லது உயர்நிலைப்பள்ளியோ பராமரிக் கப்படவில்லை. நகராட்சி எல்கைக்குள் அரசினாலும் தனியார்களாலும் 8 உயர் நிலைப்பள்ளிகள் பராமரித்து வருகின்றன.

## பிரத்தியேக படிப்பகஙகள்

இந்நகராட்சியால் பிரத்தியேகப் படிப்பகஙகள் ஒன்றும் பராமரிக்கப்படவில்லை

## படிப்பகஙகள் மற்றும் நூால் நிலையஙகள்

நகராட்சியால் நூால் நிலையஙகள் ஒன்றும் பராமரிக்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் இரண்டு படிப்பகஙகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. படிப்பகஙகளுக்கு இவ்வாண்டு செலவு ரூ.45,962/– ஆகும். சென்ற ஆண்டு ரூ.40,000– மாவட்ட நூாலகக்குழுவினரால் ஒரு படிப்பகம் மற்றும் நூாலகம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## பொறியல் பிரிவு

1. **சிப்பந்திகள்:–**

### பொறியியல் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| பொறியாளர் | –1 |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | –1 |
| குழாய் பொருத்துநர் | –1 |
| மின் பணியாளர் (தண்ணீர் விநியோகம் பிரிவு) | –3 |
| அலுவலக உதவியாளர் | –1 |
| தண்ணீர் தலைமையிட காவலர் | –1 |
| பம்பு கிளீனர் | –1 |
| குழாய் திறப்பாளர் | –1 |
| குடிநீர் விநியோக லாறி ஒட்டுநர் | –1 |

திருவாளர்கள். பி.கே. ரமேஷ் மற்றும் கு. மணி ஆகியோர் அறிக்கையாண்டில் பொறியாளராக பணியாற்றியுள்ளார்கள். இவர்களுக்கான சம்பளம் குடிநீர் நிதியிலிருந்து வழஙகப்பட்டு வருகிறது. திருமதி.ப. குறள்செல்வி பொதுப்பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்தார்.

## 4. சாலை, பாலஙகள் மற்றும் கட்டிடஙகள்

நகராட்சி எல்கைக்குள் கிடக்கும் சாலைகளை நெடுஞ்சாலைகள், பிற சாலைகள் என இரண்டாக பாகுபடுத்தப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள் நீளம் சுமார் 11.32 கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி எல்கை வழியாக திருவனந்தபுரம் நாகர்கோவில் சாலை போகிறது. இதனை நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த சாலைகளின் நீளம் 35.90 கிலோ மீட்டர் ஆகும்.

| | | |
|---|---|---|
| 1. சிமெண்ட் சாலைகள் | – | 20.653 |
| 2. தார் சாலைகள் | – | 19.549 |
| 3. இதர சாலைகள் | – | 1.214 |
| | மொத்தம் | 41.416 |

அறிக்கையாண்டில் ரூ..1,50,00,000/– சிறப்பு சாலை திட்டத்தில் சாலைகளுக்காகவும் மற்றும் இதர பொதுப் பணிகளுக்காகவும் செலவிடப்பட்டன. சாலைகளும் வீதிகளும் போதிய அகலமுள்ளதாக இருக்கின்றன. ஆக்கிரமிப்புக்கள் ஏற்படாமல் கூடிய மட்டும் தடுக்கப்படுகிறது. சாலை போக்குவரத்து காவல் துறையினரால் கண்காணிக்கப்படுகிறது.

நகராட்சி எல்கையில் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் கட்டப்பட்டுள்ள பாலம் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பாலம் பழுதடைந்துள்ளதால் நெடுஞ்சாலை துறையினரால் ரூ.18.341 கோடி செலவில் ஒரு புதிய பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## கருவிகளும், தளவாடஙகளும்

நகராட்சிக்கு சொந்தமான 5 பார உந்துகள் உள்ளன. அதில் மூன்று பார உந்துகள் நகராட்சி பகுதிகளிலுள்ள குப்பை கூழஙகளை அள்ளி கலவை உரக்கிடஙகில் கொட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டது. ஒருபார உந்து குடிநிர் வழஙக பயன்படத்தப்பட்டு வருகின்றது. ஒரு பார உந்து கழிவு நீர் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வண்டிகள் பராமரிப்பு வகைக்கு நிதியாண்டில் ரூ.48,260/– செலவு செய்யப்பட்டுள்ளன.

## 5. தெரு விளக்கு வசதிகள்

நகராட்சி பகுதி முழுவதிலும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 1242 குழல் விளக்குகளும் 265 சோடியம் வேப்பர் விளக்குகளும் 88 CFL விளக்குகளும், ஐந்து ஹைமாஸ்ட் விளக்கும் ஆக மொத்தம் 1600 விளக்குகள் பராமரிக்கப்பட்டது. தெரு விளக்குகள் பராமரிக்கும் பணி மின் வாரியத்தினரால் 15–9–89–ல் நகராட்சியிடம்

ஒப்படைக்கப்பட்டது. தெருவிளக்குகள் பராமரிக்க கீழ்குறிப்பிடும் பணியாளர்கள் பணியாற்றினர்.

| | |
|---|---|
| மின் கம்பியாள் | – 2 |
| மின் கம்பி உதவியாளர் | – 2 |

அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவுகள் தவிர மின் கட்டணம் செலுத்துதல் மற்றும் மின்உபகரணங்கள் வாஙகிய வகைக்கு ரூ.30,00,000/–ம் செலவிடப்பட்டது. நகரில் நிதியாண்டில் அனைத்து விளக்குகளும் நல்ல முறையில் எரியவிடப்பட்டன.

## 6. குடிநீர் விநியோகம்

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1978–ம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுவருகிறது. குடிநீர் நகரின் மையப்பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றிலிருந்து நான்கு எண்ணம் திறந்துவெளி கிணறு மூலம் ஐந்து எண்ணம் உயர் நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும் மூன்று எண்ணம் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிக்கும் ஏற்றப்பட்டு நாளொன்றுக்கு 20.94 லட்சம் லிட்டர் குடிநீர் மக்களுக்கு வழஙகப்பட்டுவருகிறது. மேற்படி ஏழு எண்ணம் நீர்த்தேக்க தொட்டிகளின் கொள்ளவும் மொத்தம் 12.55 இலட்சம் லிட்டராகும் மேற்படி குடிநீரை கொண்டு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு 90 லிட்டர் குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.

அவை போக நகரில் மொத்தம் 3789 எண்ணம் குடிநீர் இணைப்புகளும் 75 எண்ணம் பொது குடிநீர் குழாய்களும் உள்ளன. அவற்றில் 3490 குழாய் இணைப்புகள் வீட்டு இணைப்பாகவும், 224 எண்ணம் வியாபார நோக்கு இணைப்பாகவும் உள்ளன.

மேலும் நகரில் 18 எண்ணம் அடிகுழாய் மூலமாகவும், 15 எண்ணம் திறந்த வெளி கிணறு மூலமாகவும், குடிநீர் வழஙகப்படுகின்றது. மேலும் குடிநீர் வழஙக இயலாத நிலை ஏற்படும் காலஙகளில் அப்பகுதிகளுக்கு லாரி மூலமாக குடிநீர் வழஙகப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் இந்நகரில் குடிநீர் பற்றாக்குறை ஏதும் இல்லை என கூறலாம்.

### வடிகால்:–

இந்நகராட்சியில் வடிகால் திட்டம் பராமரிக்கப்படவில்லை. கச்சா வடிகால் நகராட்சி சாலை பணியாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 7. நகரமைப்பு பிரிவு

1) நகரமைப்பு விதிகள் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது. இந்நகராட்சியில் முழுமைத் திட்டம் அரசாணை எண்.எம்.எஸ்.1520 எச்.யு.டி நாள் 3–12–91 அரசால் அனுமதிக்கபபட்டு தற்பொழுது அமுலில் உள்ளது. ஆனால் நகரமைப்பு திட்டஙகள் ஒன்றும் இந்நகராட்சியில் அமுலில் இல்லை. அறிக்கையாண்டில் திருமதி.எஸ். சுதா நகரமைப்பு ஆய்வராக பணியாற்றி வந்தார் நகரமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் கட்டிட உரிம கட்டணம் ரூ.3,05,527/–பெறப்பட்டது. சென்ற ஆண்டு மேற்படி வகையில் ரூ.2,97,620/–வசூலானது அறிக்கையாண்டில் 250 எண்ணம்

கட்டிட அனுமதிக்கு மனுக்கள் பெறப்பட்டு 238 எண்ணம் மனுக்களுக்கு அனுமதி ஆணை வழஙகப்பட்டு உள்ளது.

## 2) ஆக்கிரமிப்புகள்:—

அறிக்கையாண்டில் ஆட்சேபனைகரமான ஆக்கிரமிப்புகளை நகராட்சி ஆணையாளரால் இடம் பார்வையிட்டு 79 எண்ணம் ஆக்கிரமிப்புகளுக்கு தற்காலிக லைசன்ஸ் வழஙகப்பட்டுள்ளது. மேலும் சாலையோரஙகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடஙகளில் 14 எண்ணம் மொத்த கடைகளை வைக்க அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து ஆட்சேபனை அற்ற தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு கட்டணம் வசூலித்து வருகிறது. அறிக்கையாண்டில் ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ.19474/— வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்த நகராட்சியில் நகர அளவையர் வருவாய் துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். இந்நகராட்சி எல்லையை விரிவாக்க அளவை இலாகாவினரால் அளக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆவணஙகள் நகராட்சிக்கு 22—2—1982—ல் ஒப்படைக்கப்பட்டது. நகர அளவை ஊழியர்களுக்கு பணி செலவில் 2/3 பாகம் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு வழஙக வேண்டும் என மன்றம் தமது 21—11—1981—ம் தேதிய 376—ம் எண் தீர்மானப்படி தீர்மானித்துள்ளது. இந்நகராட்சியில் அளவை பணியாளர்களாக ஒரு நகர அளவையரும், ஒரு புல உதவியாளரும் பணி ஆற்றினர். ஆனால் மேற்படி ஊழியர்களுக்கு 1—4—93 முதல் 31—3—2004 வரை வழக்கப்பட வேண்டிய 2/3 நகராட்சி பஙகுத் தொகை ரூ.14.64 இலட்சத்தில் ரூ.4.64 லட்சம் வழஙகப்பட்டது. மீதித் தொகையினை தவணை முறைகளில் வழஙகப்படும்.

## 3) பூஙகாக்கள்:—

இந்நகராட்சியில் மரம் நடுவதற்கென ஊழியர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

நகராட்சியால் சர்.சி.வி. ராமசாமி ஐயரின் ஞாபகார்த்த பூஙகா ஒன்று நல்ல முறையில் பராமரித்து வருகிறது. இதனை பராமரிக்கவென்று தனியாக பணியாளர் ஒருவரும் இல்லை. பணியாளாரல் மாற்றுப்பணியாக ஏற்பாடு செய்யப்பட்டு பராமரித்து வரப்படுகிறது.

பூஙகாவிலிருந்து எந்த வருமானமும் நகராட்சிக்கு கிடையாது. அதன் பராமரிப்பு செலவு முழுவதும் நகராட்சி நிதியிலிருந்து செலவிடப்படுகிறது

## 4) திறந்தவெளி இடஙகள்:—

நகர் பகுதியில் மொத்தம் 15 எண்ணம் திறந்தவெளியிட.ஙகள் பள்ளி நிர்வாகத்தினராலும், பொது மக்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 5) விளையாடுமிடஙகள்:—

நகர் பகுதியில் மொத்தம் 12 எண்ணம் விளையாடுமிடஙகள் பள்ளி நிர்வாகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 6) பேருந்து நிலையம்:—

மார்த்தாண்டம் பேருந்து நிலையம் விரிவு படுத்துவதற்கு நகர் ஊரமைப்புத் துறை மூலம் ரூ.229.27 லட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு மார்த்தாண்டம் காளை சந்தை பகுதியில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.47198/2007/பி3, நாள் 15—06—2009—ன்படி அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது..

## 8. பொது சுகாதாரம்

### அமைப்பு:—

பொது சுகாதாரப்பிரிவில் அறிக்கையாண்டில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து உள்ளனர்.

| | | |
|---|---|---|
| துப்புரவு அலுவலர் | — | 1 |
| துப்புரவு ஆய்வர் | — | 1 |
| துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | — | 3 |
| துப்புரவு பணியாளர்கள் | — | 39 |
| பார உந்து ஓட்டுநர்கள் | — | 3 |

அறிக்கையாண்டில் துப்புரவு அலுவலர் பணியிடம் காலியாக இருந்தது. திரு.பி. காளிமுத்து, மற்றும் ஏ.கே. நாகராஜன், துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து உள்ளார். மேலும் திரு.பி. ராஜா, துப்புரவு ஆய்வாளராக 06—01—2012 முதல் பணிபுரிந்து வருகிறார்.

அறிக்கை ஆண்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு வாஙகப்பட்ட 21 தள்ளுவண்டிகள் மற்றும் 10 வீல் பாரோ வீடு தோறும் குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டுவருகிறது. இந்த பணியை செய்யும் பணியாளர்களை துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள் கண்காணித்து வருகிறார்கள். சென்ற ஆண்டும் இதே முறையில் இ/ப்பணி நடைபெற்று வந்துள்ளது.

துப்புரவு ஆய்வாளர் திடக்கழிவு மேலாண்மை பிறப்பு இறப்பு பதிவு செய்யும் பணி, நோய் தடுக்கும் பணி, கலவை உரம் தயாரித்து வரும் பணி மேற்பார்வையிடல், போலியோ தடுப்பு பணி, டெஙகு காய்ச்சல் தடுப்பு முகாம்கள் நடத்தும் பணி, கடைகளில் உரிமம் ஆய்வு செய்யும் பணி, உணவு கலப்பட வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகும் பணி கவனித்து வருகிறார். சென்ற ஆண்டும் இப்பணியே நடைபெற்று வந்துள்ளது.

### பிறப்பு விகிதஙகளும், மகப்பேறு உதவியும்

அறிக்கையாண்டில் 4067 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் 3663 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் பிறப்பு விகிதம் 1000—க்கு 18.9 ஆகும். சென்ற ஆண்டில் பிறப்பு விகிதம் 1000—க்கு 17.04 ஆகும்.

## மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம்—

இந்நகராட்சியின் அறிக்கையாண்டில் ஒரு மகப்பேறு மாது (Midwife) மட்டும் பணி புரிந்து வருகிறார். அவரே மகப்பேறு மையத்தின் பொறுப்பாளர் ஆவார். மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் பணியினை கவனித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் 18 மகப்பேறு பார்க்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 16 மகப்பேறு பார்க்கப்பட்டது. மேலும் இவர் தொற்று நோய் தடுப்பு பணிக்கு உதவியாகவும் ஒவ்வொரு வாரம் புதன்கிழமை குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடும் பணியும் கவனித்து வருகிறார். அறிக்கை ஆண்டில் மகப்பேறு மாது மூலம் தடுப்பு ஊசி போடப்பட்டது. விபரம் போலியோ D.P.T. 432, D.T.451, Measles 432,T.T.ANC 312 Iron tablets 30,000,Vit 'A' Solution 1243.

தேசிய இளம்பிள்ளை வாதம் தடுப்பு திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு வீடுதோறும் 2010–2011 கணக்கிடப்பட்டு 1423 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து நகராட்சி பகுதியில் 13 மையங்கள் அமைத்து ஒரே நாளில் வழஙகப்பட்டது. அறிக்கையாண்டிலும் 13 மையஙகள் அமைத்து ஒரே நாளில் 1423 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து (0–5 வயது) வழஙகப்பட்டது.

## தொற்று வியாதியினால் பாதிக்கப்பட்ட இறப்பு விகிதம்

அறிக்கையாண்டில் பதிவானஇறப்புகள் 312 ஆகும். சென்ற ஆண்டில் இறப்புகள் 288, இறப்பு விகிதம் 8.1 ஆகும். அறிக்கையாண்டில் தொற்று நோயினால் இறந்தவர் எவருமில்லை.

## கலவை உரம்:—

குழித்துறை நகராட்சியில் கலவை உரக்கிடஙகு பம்மம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2.07 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. அறிக்கையாண்டில் 1124 மெ.டன் உரம் தயாரிக்கப்பட்டது. சென்ற ஆண்டு 105 மெ.டன் உரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் விற்பனை இல்லை. கலவை உரம் மாதிரி ஒன்று சோதனைக்கு அனுப்பப்பட்டு சிறந்த உரம் என கோவை உதவி வேதியியாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இந்த வருடம் சுகாதாரப் பணியாளர்கள் எவரும் பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை.

## உணவு கலப்பட தடுப்பு சட்டம்:—

தற்பொழுது உணவு கலப்பட துறை தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் அறிக்கையாண்டின் முடிவு வரை 9 வழக்குகள் நிலுவையில் உள்ளன. 2 வழக்குகள் சென்னை உயர் நீதி மன்றத்தில் மேற்முடிவு செய்யப்பட்டது. 1 வழக்கு நாகர்கோவில் முதன்மை நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## பாதுகாப்பு மற்றும் விழாக்களும்:—

இந்நகராட்சியில் குறிப்பிடப்பட்ட அறிவிப்பு செய்யப்பட்ட விழாக்கள் ஒன்றும் இல்லை. அறிக்கையாண்டில் 86—வது வாவுபலி பொருட்காட்சி இலாகா மூலம் நகராட்சி வாவுபலி பொருட்காட்சி மைதானத்தில் 20—7—2011 முதல் 8—8—2011 முடிய நடைபெற்றது இதில் வருமானம் ரூ.54,43,755 செலவு ரூ.16,37,396 ஆகும்.

## வெறி நாய் ஒழிப்பு:—

அறிக்கையாண்டில் 37 நாய்கள் கருத்தடை செய்யப்பட்டு விடப்பட்டது.

## பொது கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பறைகள்:—

இந்நகராட்சியில் சென்ற ஆண்டு இரண்டு எண்ணம் பொது கழிப்பிடங்களும், மூன்று எண்ணம் பொது சிறுநீர் கழிப்பிடங்களும் கட்டப்பட்டு நல்ல முறையில் சுகாதாரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு அதே அமைப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது.

### பொது கழிப்பிடங்கள்

1) நரியன்விளை பொது கழிப்பறை
2) குழித்துறை ஆர்.சி.தெரு பகுதி பொது கழிப்பறை

### பொது சிறுநீர் கழிப்பறை

1) குழித்துறை சந்திப்பு பகுதி
2) கழுவன் திட்டை ஆர்.சி.தெரு
3) வி.எல்.சி. கிரவுண்ட்
4) நரியன்விளை பகுதி
5) மார்த்தாண்டம் பழைய தியேட்டர் சந்திப்பு

வரவான மான்யங்கள் :— அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு அரசிடமிருந்து கீழ்கண்ட மான்யங்கள் பெறப்பட்டுள்ளன.

1. பாராளு மன்ற உறுப்பினர் நிதி — ரூ. 10.50 லட்சம்

<u>வரவான கடன்கள்:—</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்கு அரசிடமிருந்து கடன்கள் ஏதும் பெறப்படவில்லை.

<u>குறியீடுகள்:—</u>

அறிக்கையாண்டில் நகராட்சி நிதியிலிருந்து புதிதாக முதலீடு எதுவும் செய்யப்படவில்லை. சென்ற அறிக்கையாண்டில் இறுதியிருப்பாக இருந்த முதலீடு தொகை ரூ.140845/— தொடர்ந்து இருப்பாக இருந்து வருகிறது.

<u>திருப்பி செலுத்த வேண்டிய கடன்கள்:—</u>

அறிக்கையாண்டில் திருப்பி செலுத்த வேண்டிய கடன் தொகையாக அசலில் ரூ.155.40 இலட்சமும், வட்டிமீதி ரூ.57.14 செலுத்தப்பட வேண்டியதில் அசல் தொகையாக ரூ.3.14 இலட்சமும் வட்டித்தொகை மதிப்பு ரூ8.96 இலட்சம் செலுத்தப்பட்டு நிலுவையாக அசலில் ரூ.152.26 இலட்சம் வட்டியாக ரூ.48.18 இலட்சம் உள்ளன.

<u>வழஙகப்பட வேண்டிய நிலுவை பட்டியல்கள்:—</u>

அறிக்கையாண்டில் வழஙகப்பட வேண்டிய நிலுவை பட்டியல்கள் ஏதுமில்லை.

## <u>9. 2011—2012—ல் திட்டப்பணிகள்</u>

1) பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்—அனுமதிக்கப்பட்டதொகை ரூ.19.00 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Construction of Kalaiaraungam at Government Girls H.Sec.School in Marthandam | 3.00 | Upto roof level colum completed |
| 2 | Construction of Building in L.M.S. Girls Higher Secondary School Marthandam | 5.00 | Pastering work under progress |
| 3 | Construction of Bathing Gat at Perumkulam ward No.7 | 3.00 | Work completed |
| 4 | Formation of B.T.surface at Attakulam Police Station Backside road | 2.00 | Work completed |
| 5 | Construction of Building in L.M.S. Boys Higher Secondary School Marthandam | 6.00 | Pastering work under progress |

2) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்– அனுமதிக்கப்பட்ட மான்யம் தொகை ரூ.10.40 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Providing B.T. Surface at Kannacode Panniyani Railway Feeder line | 2.00 | Earth work under progre |
| 2 | Construction of Bathing Gat at Nessamony Brige ward No.15 Dab connel | 2.00 | - |
| 3 | Construction of Bus shellter at Kuzhithurai Junction at Near David complex | 2.00 | - |
| 4 | Construction of Bus shellter at Vettuvenni Junction near Register Office | 1.50 | - |
| 5 | Providing 160 mm Deep Borewell and Mini Power pump at Sanivilai in ward No.10 | 1.45 | - |
| 6 | Providing 160 mm Deep Borewell and Mini Power pump at Sananvilai in ward No.2 near mix center | 1.45 | - |

3) வெள்ள நிவாரண நிதி தொகை ரூ. 110.55 லட்சம்

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Providing B.T. Surface at Panamkodai vilai road | 7.00 | - |
| 2 | Providing B.T. Surface at Mids Junction Ampayanthalai road | 2.10 | Meteral collection |
| 3 | Providing Reneval B.T.Surface at Chappathu Sub road to kannacode Junction, Kanchinikadavu road, Krishnancoil road | 17.50 | - |
| 4 | Providing Reneval B.T.Surface at Vallicode kulam to Edavilagam road | 13.00 | - |
| 5 | Providing Reneval B.T.Surface at Old M.S.Road | 5.40 | Earth work under progress |
| 6 | Providing Reneval B.T.Surface at Perumkulam Maruthencode junction road | 8.00 | - |
| 7 | Providing Reneval B.T.Surfaceat Undanakuzhi road | 4.50 | Earth work under progress |
| 8 | Providing Reneval B.T.Surface at Thiruthuvapuram R.C. Church Backside road (Kottachanvilai) | 4.00 | Earth work under progress |
| 9 | Providing Reneval B.T. surface and C.C.Road Melakulam road | 6.50 | - |

| | | | |
|---|---|---|---|
| 10 | Providing Reneval B.T.Surface at Madichel road | 5.60 | - |
| 11 | Providing Reneval B.T.Surface at Nadumpul road | 1.75 | - |
| 12 | Providing Reneval B.T.Surface at Melakattu vilai road | 2.70 | Earth work under progress |
| 13 | Providing Reneval B.T.Surface at Papalanchi roa | 1.50 | - |
| 14 | Providing Reneval B.T.Surface at Kuzhithurai R.C.Theru road | 4.00 | Earth work under progress |
| 15 | Providing Reneval B.T.Surface at Bendukadavu road | 1.60 | - |
| 16 | Providing Cement Concrete Pavement at Eazakhi Amman coil road | 4.25 | - |
| 17 | Providing Cement Concrete Pavement at North Street Attakulam Chellum Salai | 3.75 | - |
| 18 | Providing Cement concrete Pavement at Rajavanam road | 2.00 | - |
| 19 | Providing Cement concrete Pavement Chenganmulm kadavu, Azhignanvilai road | 3.50 | - |
| 20 | Providing Cement Concrete Pavement at Parampuvilai road | 5.80 | - |
| 21 | Providing Cement Concrete Pavement Kanchinikadavu road | 4.00 | - |
| 22 | Providing Cement Concrete Pavement Kalayankulam to Anaipaduval road | 2.10 | - |

4) மார்த்தாண்டம் பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் தொகை ரூ.365.86 லட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

| Sl. No. | Name of the Work | Estimate Amount Rs. | Stage of work |
|---|---|---|---|
| 1 | Marthandam Bus Stand Improvement Works (G.O.Ms.No.37, MA & WS. Department dated 30-1-2008 | 365.86 | A-Block<br>B-Block<br>work completed |

5) நகராட்சி பொது நிதியிலிருந்து செய்யப்பட்ட பணிகள்

| Sl. No. | Name of the Work | Estimate Amou Rs. |
|---|---|---|
| 1 | Leveling garbage work compost Goral | 1.00 |
| 2 | Construction of retaining wall at Padaparai | 2.42 |
| 3 | Construction of drainage ward No.10 | 1.20 |
| 4 | Maintenance work of P.P. Muniswamy complex | 4.92 |
| 5 | Electrical Maintenance work at computer room | 0.50 |
| 6 | Construction of shorm waters drainage New Bus sta limited | 2.29 |

| | | |
|---|---|---|
| 7 | Construction of Brich work in cross wall | 0.08 |
| 8 | Providing 160mm Deep Bore well at Kazhuvanthittai | 1.25 |
| 9 | Engurachment work of Municipal Limit | 0.48 |
| 10 | Maintenance and painting work for Bunk stall | 0.50 |
| 11 | Removing and laying of cable line at new Briage | 0.13 |
| 12 | Providing B.T.Surface to R.C. Church Road Marthanda | 0.98 |
| 13 | Providing Foot path in Kalpalathadi | 0.75 |
| 14 | Supply and fixing of the Birth control Dog Box | 0.50 |
| 15 | Improvement work for the fixisting fish Market in t perunthеru | 1.25 |
| 16 | Providing Cement Concrete pavement in Pattaha Salai | 2.20 |
| 17 | Providing Cement Contorable pavement Nathachaivilai | 0.09 |
| 18 | Removing the Black earth and sitt clearance in PI Hospital to Cha | 0.33 |
| 19 | Providing RCC Slab with attakulam Opposite side Roa | 2.20 |
| 20 | Maintenance and Desilting Municipal wall and Cov Slab in Kuzhivilai Road | 1.91 |
| 21 | Construction of rehevning wall near Nallukottu Kulam | 0.74 |
| 22 | Construction of Step of Angancoli Building | 1.97 |
| 23 | Construction of Draninage at RC Street Marthandam | 1.55 |
| 24 | Providing at Caboard in Municipal Office | 0.66 |
| 25 | Remove the earth silt of drainage at various place | 0.38 |
| 26 | Maintenance work for drainage side wall at Police Station Back side | 0.74 |
| 27 | Leveling the Garbage wast in the compost yard | 0.25 |

## குடிசை பகுதிகள் விபரம்

இந்நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகளாக 4 எண்ணமும், அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகளாக 2 எண்ணமும் உள்ளன.

### அங்கீகரிக்கப்பட்ட குடிசை பணிகள்

பெயர்

1) நரியன்விளை குடிசை பகுதி
2) கொடுங்குளம் குடிசை பகுதி
3) பறம்பு குடிசை பகுதி
4) ஆர்.சி.தெரு, மார்த்தாண்டம்

<u>அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகள்</u>

1) ஆர்.சி.தெரு, குழித்துறை
2) பழவார் குடிசை பகுதி

## <u>10. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்</u>

**30–6–2004** அன்று இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வந்த **5** சத்துணவு மையங்களும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட மேற்படி துறைக்கு ஒப்படைக்கப்பட்டது.

## <u>11. சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம்</u>

அறிக்கையாண்டில் மேற்படி திட்டத்தில் கீழ்கண்ட இனஙகளுக்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதின் விவரம்

### 1) <u>சுயவேலை வாய்ப்புத் திட்டம் (USEP)</u>

**2011–2012–ம்** ஆண்டிற்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு **ரூ.105107/–** ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மத்திய அரசு தொகையாக **ரூ.39415/–** வரப்பெற்று **4** பயனாளிகளுக்கு வஙகியில் கடன் வழஙக மானியம் பயனீட்டு செய்யப்பட்டது.

### 2) <u>சுயதொழிலின் திறன் பயிற்சி (STEP - Up)</u>

**2011–2012–ம்** ஆண்டு இத்திட்டத்திற்கு **ரூ.248837/–** ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மத்திய அரசு தொகையாக **ரூ.93313/–** வரப்பெற்று **31** பயனாளிகளுக்கு கணனி பயிற்சிக்கு செலவு செய்யப்பட்டு வருகிறது.

### 3) <u>நகர்புற மகளிர் சுய உதவித் திட்டம் ( UWSP )</u>

**2011–2012–ம்** ஆண்டு மானியமாக **ரூ.78831/–** ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மத்திய அரசு தொகையாக **ரூ.29561/–** வரப்பெற்று ஒரு மகளிர் குழுவிற்கு தொழில் தொடஙக வஙகியில் மானியம் பயனீடு செய்யப்பட்டது.

**4) சுழல் நிதி (UWSP – RF)**

2011–2012–ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பெற்ற தொகையான ரூ.26277/–ல் மத்திய அரசு தொகையாக ரூ.9853/– வரப்பெற்று 5 பயனாளிக்கு சுழல் நிதி வழஙகப்பட்டது.

**5) நகர்புற சமுதாய முன்னேற்ற கூட்டமைப்பு (UCDN)**

2011–2012–ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.52554/– தொகையில் மத்திய அரசு தொகையாக ரூ.19707/– வரப்பெற்று மருத்துவ முகாம் நடத்தப்பெற்றது.

**6) நகர்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் (UWEP)**

2011–2012–ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.151195/–ல் மத்திய அரசு தொகைகாக ரூ.56698/– பெறப்பெற்று சிமெண்ட் தளம் அமைக்கும் பணி நடைபெற்றது.

**பாலிகா சமர்த்தி யோஜனா திட்டம்**

அறிக்கையாண்டில் பாலிகா சமிர்த்தி யோஜனா திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை.

**முத்துலெட்சுமி மகப்பேறு உதவித் திட்டம்**

2011–2012–ம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 28 மனுக்கள் பெறப்பட்டு அதில் 28 பேர்களுக்கு தலா ரூ.6000/– வீதம் மொத்தம் ரூ.1,68,000/– நிதி வழஙகப்பட்டது. நிலுவை மனுக்கள் ஏதுவும் இல்லை.

## 12. வழக்குகள்

2011–2012–ம் வருட மொத்தம் 31 வழக்குகள் நிலுவையில் உள்ளது.

**13) தணிக்கை:–**

அறிக்கையாண்டு துவக்கத்தில் 1134 தணிக்கை தடை இருந்தன. 66 எண்ணம் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆண்டின் முடிவில் 1068 தணிக்கை தடைகள் நிலுவையாக உள்ளன.

**14) நிதி நிலைமை:—**

அறிக்கையாண்டின் துவக்கத்தில் ஆரம்ப இருப்பாக ரூ.1,43,692 மொத்த வரவாக ரூ.4,45,55,500 மொத்த செலவினமாக ரூ.4,09,57,000 இறுதியிருப்பாக ரூ.50,35,400 உள்ளன.

**15) முடிவுரை:—**

அறிக்கையாண்டில் வழக்கம்போல் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் நகர் மன்ற தலைவர் தேசிய கொடி ஏற்றி வைக்க மிக எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. மேற்படி வைபத்தில் அனைத்து நகர் மன்ற உறுப்பினர்களும், நகரின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ஆணையாளர் அவர்கள் அவரோடு பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்களிடையே சுமூகமான உறவு இருந்தது. அதை போல் தலைவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் ஆணையர், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறவு சுமூகமாக முறையில் இருந்தது. நிர்வாகம் சரிவர நடக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்கினார்கள்.

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.